# இயல் 6 நிகழ்கலைகள்

1.கரகாட்டம் பற்றி எழுதுக.

- பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் பாரம்பரியக் கலைகளில் ஒன்றே கரகாட்டம்.
- கரகம் என்னும் பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம்.
- இந்த நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.
- நையாண்டி மேள இசை. நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகள்.
- தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது.

2.மயிலாட்டம் என்றால் என்ன? எவ்வாறு ஆடப்படுகிறது?

- மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டம் ஆகும்.
- மயிலாட்டம் ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளில் ஆடப்படுகிறது.

3.காவடியாட்டம் பற்றி குறிப்பு எழுதுக.

- காவடியாட்டம் என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்.
- இரு முனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம் எனப்படுகிறது.
- காவடியைப் பலவாறு அழகுபடுத்துவர். அதன் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி எனப் பலவாறு அழைக்கப்படும்.
- காவடியாட்டம், இலங்கை, மலேசியா உட்பட புலம் பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் ஆடப்படுகிறது.

4.ஒயிலாட்டம் குறிப்பு எழுதுக. ஒயிலாட்டம் எவர்களால் ஆடப்படுகிறது?

- ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டம் ஒயிலாட்டம்.
- உணர்ச்சிக்கேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறிமாறி மனத்தை ஈர்க்கும். இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.
- ஒருவருக்கொருவர் இடம் விட்டு விலகி நின்று ஆடும் இந்த ஒயிலாட்டத்தை பெரும்பாலும் ஆண்கள் ஆடுவதே வழக்கத்தில் உள்ளது.
- ஒரே குழுவில் வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் இணைந்து ஆடுவதும் உண்டு.
- தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்றவை ஒயிலாட்டத்திற்கான இசைக் கருவிகள் ஆகும்.

5. தேவராட்டம், சேர்வையாட்டம் எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது?

- தேவராட்டம், வேட்டி கட்டியும், கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகிறது.
- இவ்வாட்டத்தில் பெரும்பான்மையாக எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பொது மரபு. இது சடங்கியல் நிகழ்வாக ஆடப்படுகிறது.
- சேர்வையாட்டம் தேவராட்டம் போன்றே ஆடப்படும் கலை.
- இவ்வாட்டக் கலைஞர்கள் சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டே ஆடுகின்றனர்.
- இதனை இசைச்சார்புக் கலையாகவும் வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

6. தப்பு ஆட்டம் - குறிப்பு எழுதுக.

- தப்பு என்ற தோற்கருவியை இசைத்துக் கொண்டே அதன் இசைக்கேற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டம்,
- ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டமானது தற்போது பெண்களாலும் ஆடப்படுகிறது.
- தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்று அழைக்கப்படுகிறது.

- கோயில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி போன்ற நிகழ்வுகளில் இவ்வாட்டம் ஆடப்படுகிறது.
- தப்பாட்ட இசை குறித்து அருணகிரிநாதர் தம் திருப்புகழில்:

"தகக தகதக்க தந்தந்த தந்தக்க

என்று தாளம் பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக" - என்று பாடியுள்ளார்.

தப்பாட்டத்தின் ஆட்டக் கூறுகள்:

- வட்டமாக ஆடுதல்.
- இரண்டு வரிசையாக எதிர் எதிர்த்திசையில் நின்று ஆடுதல்.
- அனைவரும் நேர்வரிசையில் நின்று ஆடுதல்
- குதித்துக் குதித்து ஆடுதல்.
- உட்கார்ந்து எழுதல்,
- நடையாட்டம்.

7.பொய்க்கால் குதிரையாட்டம் பற்றி விளக்குக.

- போலச் செய்தல்' என்ற பண்பினை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆட்டம் ஆடப்படுகிறது.
- மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டு, குதிரை வடிவத்திலுள்ள கூட்டில் உடம்பை நுழைத்துக் கொண்டு ஆடுவர்.
- சலங்கை அணிந்து ஆடுவர்.
- இந்த ஆட்டத்தை ஆடுவோர் அரசன், அரசி போல் உடையணிந்து, தலையில் கிரீடம் அணிந்து ஆடுவர்.
- நையாண்டி மேளம், நாகசுரம் இசைக்கப்படுகின்றன.
- இந்த ஆட்டத்திற்குப் பாடல்கள் பாடப்படுவதில்லை.

வேறுபெயர்கள் :

- தமிழ்நாடு - புரவி ஆட்டம் , புரவி நாட்டியம்
- இராஜஸ்தான் - கச்சிகொடி
- கேரளா - குதிரைக்களி

8.புலி ஆட்டம் பற்றி எழுதுக.

- தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாக இந்த ஆட்டம் நிகழ்த்தப்படுகிறது. இந்த ஆட்டத்தில் பாட்டு, வசனம் எதுவும் இருக்காது.
- அலங்காரம்: உடலில் கறுப்பு மற்றும் மஞ்சள் வண்ணத்தில் கோடுகள் வரைந்து, துணியால் ஆன வாலை இடுப்பில் கொண்டு ஆடுவர்.

இசைக்கருவி :

- தப்பு பறை

ஆடுவோரின் எண்ணிக்கை :

- ஒருவர் அல்லது இருவர் ஆடுவர்.

ஆட்டத்தின் பல்வேறு அடவுகள் :

- புலியைப் போன்று நடத்தல், பதுங்குதல், பாய்தல், உறுமுதல்.

9.தெருக்கூத்தின் வளர்ச்சி பற்றி எழுதுக.

- தெருக்கூத்து வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது.
- அருச்சுனன் தபசு என்பது மழை வேண்டி நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது.
- கூத்துக்கலைஞர், கூத்தைக் கற்றுக்கொடுப்பவர் ஆகியோரின் அடிப்படையிலும், காலம், இடம் போன்றவற்றின் அடிப்படையிலும் கூத்து நிகழ்த்தப்படுவதில் சிறுசிறு மாறுபாடுகள் உள்ளன.
- தெருக்கூத்து, பொழுதுபோக்குக் கூறுகளையும் பெற்று நாடகமாக வளர்ச்சியடைந்துள்ளது.
- இதனைக் கதகளி போன்று செவ்வியல் கலையாக ஆக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
- திறந்தவெளியை ஆடுகளமாக்கி ஆடை, அணி, ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது.
- களத்துமேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து, தெருச் சந்திப்புகளிலும் நிகழ்த்தப்படுகிறது.
- பின்னர் கோயில் சார்ந்த கலையாகவும் ஆக்கப்பட்டது. இதில் ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவற்றை

ஒருங்கிணைத்து வழங்குவர். திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது.

10. தோற்பாவைக் கூத்து விளக்குக.

- தோலில் செய்த வெட்டு வரைபடங்களை விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும் பக்கவாட்டில் இசைக்கேற்பவும் உரையாடலுக்கு ஏற்பவும் அசைத்துக் காட்டுவது தோற்பாவைக் கூத்து ஆகும்.
- இசை, ஓவியம், நடனம், நாடகம், பலகுரலில் பேசுதல் ஆகியவை இணைந்துள்ளன.
- இதில் பாவையின் அசைவு, உரையாடல், இசை ஆகியவற்றோடு ஒளியும் முதன்மை பெறுகின்றது.
- திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது.
- ஊர் ஊராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக்குடும்பக் கலையாகத் தோற்பாவைக் கூத்து, கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.